**தலைப்பு 10 – இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 10 – இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 10 ஆம் திகதி ஆணைக்குழுவின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

ஆணைக்குழுவிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 291.95 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 256.33 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 35.62 மில்லியன் அதாவது 12.20 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 245.50 | 225.16 | 20.34 | 8.28 |
| மூலதன | 46.45 | 31.17 | 15.28 | 32.89 |
| மொத்தம் | 291.95 | 256.33 | 35.62 | 12.20 |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

ஆணைக்குழுவிற்குரிய விடய இலக்கம் 01001 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 4.69 | 4.67 | 3.69 | 5.08 | 20.00 | 14.66 |

**2.2.2 இலஞ்ச சுற்றிவளைப்பு முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

ஆணைக்குழுவிற்குரிய விடய இலக்கம் 01002 இன் இலஞ்ச சுற்றிவளைப்பு முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 250.00 | 7.06 | 2.50 | 3.44 | 275.00 | 19.34 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகள் ரூபா 148,324 ஆக இருந்தது.

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

ஆணைக்குழு அலுவலகத்தினால் நிதிப் பிரமாணம் 1647(ஈ) இன் பிரகாரம் எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் இருப்புப் புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்

ஆணைக்குழுவிற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவிற்கு 2016 யூன் 10 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 19.34 மில்லியனாக இருந்தது.

### 3.3 இலஞ்ச சுற்றிவளைப்பு முற்பணக் கணக்கு

மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவினால் 01002 ஆம் விடய இலக்க இலஞ்ச சுற்றிவளைப்பு முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அக்கணக்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

இலஞ்ச சுற்றிவளைப்பு முற்பணக் கணக்கில் வழக்குப் பொருட்கள் உத்தியோகத்தரின் காசு மீதி ரூபா 19.12 மில்லியனாக இருந்தது. அதில் ரூபா 5.28 மில்லியனுக்குரிய 147 வழக்குகள் 05 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையிலான கால வீச்சிங்குரியதாக இருந்ததுடன் அந்த வழக்குகளில் 19 வழக்குகள் மாத்திரம் முடிவுறுத்தப்பட்டதாக பதிலளிக்கப்பட்டிருந்த போதும், அந்த வழக்கிற்குரிய வழக்குப்பொருள் பண மீதி தீர்க்கப்பட்டமைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 2016 யூன் 10 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

ஆணைக்குழுவின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

ரூபா 3.68 மில்லியன் கூட்டுப்பெறுமதியான 03 மோட்டார் வாகனங்கள் மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத மோட்டார் வாகனமொன்று என்பன விளைவற்றுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ஆணைக்குழுவினால் அந்த அறிக்கை 2016 யூன் 10 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்டிருந்தது.

**3.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 104(1) | - | 2015 ஆம் ஆண்டின் போது 2 சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவிற்குச் சொந்தமான வாகனங்கள் விபத்திற்குட்பட்டிருந்த போதும் அது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1645(ஆ) மற்றும் 1646 | 84,042,648 | 25 குழாம் வாகனங்களுக்குரிய 2015 ஒக்தோபர் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய - 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் ஒரு தடவை ஆணைக்குழுவிற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.7 செயலாற்றல்**

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

ஆணைக்குழுவினால் பிரதான பணிகள் போதியளவாக நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் கிடைத்து புலனாய்வுகள் மேற்கொள்ளப்படாது முன்கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 9752 ஆக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது 3913 முறைப்பாடுகள் கிடைத்திருந்தது. இந்த 13665 முறைப்பாடுகளில் 3021 முறைப்பாடுகள் மாத்திரம் 2015 ஆம் ஆண்டின் போது புலனாய்வு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2015 ஆம் ஆண்டின் போது மாகாண மட்டத்தில் ஆகக் குறைந்தது 03 மாகாணங்களில் 03 நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) வழக்குத் தொடரல் மற்றும் வழக்கு செயற்பாடுகள் இந்த நிறுவனத்தின் இன்னொரு பிரதான பணியாக இருந்ததுடன் ஆண்டின் போது புலனாய்வு செய்யப்பட்ட 3021 முறைப்பாடுகளில் 108 கோவைகளுக்காக மாத்திரம் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

**3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளைப் பின்பற்றாமை**

உத்தியோகபூர்வ வீடுகளை பழுதுபார்ப்பதற்காக நிறுவனத்தினால் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்ட வேண்டியிருந்த போதிலும், அந்தப் பணிகள் சிவில் பாதுகாப்பு சேவைத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

முறையான அங்கீகாரமின்றி ஆணைக்குழுவின் கட்டிடங்கள் மற்றும் நிர்மாண செலவின விடயத்தின் கீழ் ரூபா 508,834 தொகை செலவில் அரச நிர்வாக அமைச்சிற்குரிய உத்தியோகபூர்வ வீடொன்று புதுப்பிக்கப்பட்டிருந்தது.

**3.9 நட்டமும் இழப்பும்**

ஒதுக்கீட்டுக் கணக்கில் நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் தொடர்ந்தும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு இருந்த ரூபா 217,560 தொகையான பதினொரு நட்டங்கள் அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நட்டத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. அதில் ரூபா 61,005 பெறுமதியான 2 சம்பவங்கள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்ததாக இருந்தது.

**3.10 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர்கள் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 62 | 24 | 38 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 22 | 14 | 08 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 590 | 249 | 341 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 128 | 59 | 69 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 03 | - | 03 |
| | மொத்தம் | 802 | 349 | 456 | 03 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 456 வெற்றிடங்கள் காணப்பட்டன. ஆணைக்குழுவினால் அந்த வெற்றிடங்களை முறையாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் இல்லாத மூன்று அமைய ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.